# பொருளடக்கம்

**உள்ளடக்கம்** பகÊக இல


| | | |
|---|---|---|
| 1. | விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை வரலாற்று பின்னணி | 01 |
| 2. | இலக்கு/நோக்கம்/கூட்டு முறையிலான நோக்கம் | 02 |
| 3. | கூட்டு முறையிலான தகவல்கள் | 03 |
| 4. | சுகாதார பணிப்பாளருக்கு வருடாந்த அறிக்கையை அளிப்பதற்கான தலைவரின் கடிதம் | 04 |
| 5. | மனிதவள அபிவிருத்தி | 05 ~ 06 |
| 6. | 2013ம் ஆண்டில் பெற்ற பிரதான வெற்றிகள் | 07 |
| 7. | வைத்தியசாலை மூலம் பெற்று கொள்ளும் சேவைகள் சம்மந்தமான அறிக்கை | 08 ~ 21 |
| 9. | 2013ம் டிசம்பர் 31ம் திகதி முடிவிலான பŸட்ோr மீதி | 22 ~ 23 |
| 10. | 2013ம் டிசம்பர் 31ம் திகதி முடிவிலான வருமான செலவு கணக்கு | 24 ~ 37 |
| 11. | 2013ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விளக்கங்களும் சீர்படுத்தல் செயற்பாடுகளும் | 38 ~ 47 |

## 2013 ஆம் ஆண்டிற்கான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் ஆண்டறிக்கையும் கணக்கறிக்கையும்

## 2013 ஜனவரி 01 தொடக்கம் 2013 டிசெம்பர் 31 வரை

## விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை

## சீதுவ

**<u>வரலாற்று பின்னணி</u>**

விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை 1998 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மன்ற சட்டமாகக் குறிப்பிடப்படும் பாராளுமன்றச் சட்டத் தின் மூலம் தாபிக்கப்பட்டு 1999 நவெம்பர் 12 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை, 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் திகதி கொல்லப்பட்ட மறைந்த திரு. விஜயகுமாரதங்க அவர்களின் ஞாபகார்த்தமாக தாபிக்கப்பட்டது. சீதுவ பிரதேசத்தின் பிரதம தேரர் வண. பிரான்ஸிஸ் சுனந்த வணசிங்ஹ அவர்கள், மனிதநேயமுடைய விஜயகுமாரதுங்க அவர்களின் ஞாபகம் நிலைத்திருப்பதற்கு அவர் பிறந்த, படித்த, வாழ்ந்த பிரதேசத்தின் மக்களுக்கு சேவையாற்றுவதற்கு வைத்திய சாலை ஒன்றை நிறுவுவதே சிறந்த வழி என அன்றைய இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த மாண்புமிகு சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களுக்கு ஆலோசனை வழங்கினார். அந்த ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி, கட்டுநாயக்க/சீதுவ நகரசபை எல்லைக்குள் கொழும்பு, நீர்கொழும்பு நெடுஞ் சாலையில் சீதுவப் பகுதியில் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மன்றத்தினால் இரண்டு வாட்டு (60 படுக்கைகள்) மற்றும் வெளி நோயாளர் பிரிவு என்பவற்றை உள்ளடக்கியதாக ஒரு வைத்தியசாலை நிர்மானிக்கப்பட்டது. இந்த வைத்தியசாலை விஜயகுமாரதுங்கவின் பிறந்த நாளான 1999 ஒக்ரோபர் 09 ஆம் திகதியன்று அப்போது ஜனாதிபதியாக இருந்த மாண்புமிகு சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களால் மக்கள் பாவனையின் பொருட்டு திறந்து வைக்கப்பட்டது. வைத்தியசாலையின் நிர்வாகம் பணிப்பாளர்கள் சபையினால் நிர்வகிக்கப்படுகிறது.

பணிப்பாளர்கள் சபை கொள்கைத் தீர்மானங்களை எடுக்கும் அதேவேளை, விஜயகுமார துங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் நாளாந்த முகாமைத்துவத்தின் செயற்பாட்டு நிர்வாகம் “ 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத் தியசாலை சபை சட்டத்தினால்” விஜயகுமாரதுங்க வைத்தியசாலை சபையிடம் கையளிக் கப்பட்டுள்ளதுடன் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசாங்க வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி பகுதி ஒன்றாக, 2004 ஆம் ஆண்டில் 88 படுக்கைகளுடன் கண் சிகிச்சை வாட்டு ஒன்றையும் உள்ளடக்கியதாக தனியான கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தற்போது படுக்கைகளின் மொத்த எண்ணிக்கை 148 ஆகும். பொதுமக்களுக்கு உயர்தரமான சேவையை வழங்கும் நோக்குடன் தற்போதைய தரங்கள் அதிகரிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக் கூடம் உள்ளடங்களாக முழுமையாக செயற்படும் கண்சிகிச்சை வாட்டு ஒன்று 2007 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டில் பொது களஞ்சியப்படுத்தல் தேவைக்காகவும் மருத்துவ ஆவணங்கள் பேணும் அறை, கடமை அறைகள் மற்றும் விரிவுரை மண்டபம் போன்ற தேவைகளுக் காகவும் தனியான இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

2013ம் ஆண்டு 4386 சதுர அடியிலான மூன்று மாடி கட்டிடம் NERD நிறுவனத்தின் அறிவுரைகளோடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டிடம் இரசாயன கூடம் சிகிச்சை பிரிவு விடுதி அறைகள் போன்ற அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. இந்த கட்டிடத்தின் டென்டர் செயற்பாடுகள் நிறைவு பெற்றுள்ள பௌதீக செயற்பாடுகள் நிறைவு பெற்றுள்ள இந்த கட்டிடத்தின் பௌதீக பெறுமதி ரூ.12,431என கண்டறியப்பட்டுள்ளது.தற்போது இந்த கட்டிட தீர்மானங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2013ம் ஆண்டு வரை 5 வாட்டு தொகுதிகள் மற்றும் 164 கட்டில்கள் வரை வளர்ச்சியடைந்துள்ள தோடு பாவனைக்குட்படுத்தாத அனைத்தும் நோயளர்களின் பாவனைக்கு எடுத்து கொள்ளப்பட்டுள்ளது.

## தொலைநோக்கு

இவ்வைத்தியசாலையின் பதவியணியினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு பிரதேச மக்களுக்கு செயற்றிறன்மிக்க வகையில் சேவையாற்றுவதுடன் நாட்டின் ஒரு நவீன வைத்தியசாலை யாகவும் ஏனைய வைத்தியசாலைகளுக்கு ஒரு உதாரணமாகவம் விளங்குவதேயாகும்.

## குறிக்கோள்

குறுகிய கால நோக்கில், தற்போது வைத்தியசாலையில் உள்ள வசதிகளை பிரதேச மக்களின் சுகாதாரத் தேவைகளை நிறைவேற்றுமுகமாக வினைத்திறன் மிக்க வகையிலும் அர்ப்பணிப்புடனும் பயன்படுத்துதல். நீண்டகால நோக்கில் கண் தொடர்பான சிகிச்சைப் பகுதியில் நுட்ப வகையிலான சுகாதார சேவையை வழங்குவதற்கு தற்போது வைத்திய சாலையில் உள்ள வசதிகளை விரிவுபடுத்துதல்.

தற்போது வைத்தியசாலையில் உள்ள வசதிகளை இப்பிரதேச மக்களுக்கு வினைத்திறன் மிக்க வகையிலும் அர்ப்பணிப்புடனும் சேவையாற்றக் கூடியதாக உச்சளவில் வழங்குதல். மேலும் நீண்டகால நோக்கில் கண் சிகிச்சையில் சுகாதார பராமரிப்பு சேவைக்கு சமனாக நுட்ப வகையிலான நீரிழிவு முகாமைத்துவ நிலையம் ஒன்றை தாபித்து இந்த வசதிகளை விரிவுபடுத்துதல்.

## கூட்டுமுறையிலான நோக்கம்

இந்த வைத்தியசாலையின் நோக்கம் சிகிச்சைக்காக இவ் வைத்தியசாலைக்கு வரும் பொதுமக்களுக்கு வேற்றுமைகள் காட்டாது சுகாதார பராமரிப்பு சேவைகளை செயற்றிறன் மிக்கதாக வழங்குவதே ஆகும். அதேவேளை பிராந்திய நிலையத்தில் நுட்பமிக்க நீரிழிவு பராமரிப்பு முகாமைத்துவ சேவை ஒன்றை வழங்குவதுடன் வினைத்திறன் மிக்கதாக மூன்றாம் நிலைச் பராமரிப்புச் சேவை, கண் சிகிச்சை மற்றும் சத்திர சிகிச்சை பராமரிப் புச் சேவைகளை மிகவும் சிறந்த முறையில் வழங்குவதே ஆகும்.

## ஒருங்கிணைக்கப்பட்ட தகவல்
## 2013.01.01 – 2013.12.31

நிறுவனத்தின் பெயர் : விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை

முகவரி : விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை, சீதுவை

முகாமைத்துவம் : பணிப்பாளர் சபை

சட்ட வடிவம் : பாராளமன்ற சட்ட நிறைவேற்றம் மூலம்

கணக்காய்வாளர்கள் : 1. கணக்காய்வாளா நாயகம், கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம், பத்தரமுல்லை.

2. உள்ளக கணக்காய்வுப் பிரிவு, சுகாதார அமைச்சு, இலக்கம் 05 E, இரண்டாம் மாடி, பிரிஸ்டல் கட்டிடம் , யோர்க் வீதி, கொழும்பு – 10.

**<u>பணிப்பாளர்கள் சபை</u>**

- பேராசிரியர். கார்லோ பொன்சேகா - தலைவர்
- டாக்டர். பாலித மஹிபால, மேலதிக செயலாளர் (மரு.சேவை), சுகாதார அமைச்சு - பணிப்பாளர்
- திரு. என்.ஏ. உமாகிலிய தொழில்சார் பிரதிநிதி - பணிப்பாளர்
- டாக்டர். (திருமதி) பி.எஸ் ஜயலத், வைத்தியசாலைப் பிரதிநிதி - பணிப்பாளர்
- டாக்டர். விமுக்தி குமாரதுங்க வி.கு.ஞா.வை. மன்றத்தின் உறுப்பினர் - பணிப்பாளர்
- திருமதி. ருக்மல் அபேவிக்ரம, திறைசேரி பிரதிநிதி - பணிப்பாளர்
- திரு. சந்திர விக்ரமசிங்க - பணிப்பாளர்

## கணக்காய்வுக் குழு

- திருமதி. ருக்மல் அபேவிக்ரம, திறைசேரி பிரதிநிதி - தலைவர்
- டாக்டர். (திருமதி) பி.எஸ். ஜயலத், M.O.I.C வி.கு.ஞா.வைத்தியசாலை - நோக்குநர்
- திரு. எம்.எச்.பி.கருணாரத்ன, பிரதம கணக்காளர், சுகாதார அமைச்சு - நோக்குநர்
- திருமதி. பீ.ஜி.ஐ.நிரஞ்ஷ, கணக்காய்வு அத்தியட்சகர். கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் - நோக்குநர்
- திருமதி. எஸ்.ஆர்.பீ.பர்ணாந்து, பிரதான உள்ளகக் கணக்காய்வாளர். சுகாதார அமைச்சு. - கூட்டம் கூட்டுபவர்
- திரு. கே.எம்.வை.கே. கருணாரத்ன , கணக்காளர், வி.கு.ஞா.வைத்தியாலை - சமூகமளிப் பவர்

கௌரவ சுகாதார அமைச்சர்,
சுகாதார அமைச்சு,
385, வண. பத்தேகம விமலவன்ஷ தேரோ மாவத்தை,
“ சுவசிறிபாய ”,
கொழும்பு – 10

**<u>2013 ஆம் ஆண்டிற்கான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை சபையின் ஆண்டறிக்கையும் கணக்கறிக்கைகளும்</u>**

**<u>2013 ஜனவரி 01 தொடக்கம் 2013 டிசெம்பர் 31 வரை</u>**

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 14 (2) இன் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை சபையின் ஆண்டறிக்கையையும் உரிய கணக்கறிக்கைகளையும் விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை சபையின் சார்பாக நான் சமர்ப்பிக்கின்றேன்.

நன்றி

விசுவாசத்துடன்

பேராசிரியர் கார்லோ பொன்சேகா.

தலைவர்,

விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை,

சீதுவை.

பிரதி :- செயலாளர், சுகாதார அமைச்சு

# மனித வள அபிவிருத்தி

## 2013.12.31ம் திகதியின் போது பதவியணியினர்

1.நிறைவேற்று அலுவலர்கள் — 04
- பொறுப்பு வைத்திய அதிகாரி
- விசேட தர தாதி உத்தியோகத்தர்
- கணக்காளர்
- நிர்வாக உத்தியோகத்தர்

2. விசேட வைத்தியர்கள் — 08
- நிரந்தர(கண்/ காது) 02
- நிரந்தர பதவியினருக்கு மேலதிகமாக 06

| | |
|---|---|
| 3. வைத்திய அதிகாரிகள் | 16 |
| 4. பல் சிகிச்சை வைத்தியர்கள் | 01 |
| 5.பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி | 02 |
| 6. துணை மருத்துவர்கள் | 12 |
| 7. தாதி உத்தியோகத்தர்கள் | 44 |
| 8. எழுதுனர்கள் மற்றும் அத்தோடு தொடர்புபட்ட தரம் | 05 |
| 9.உணவு பொறுப்பதிகாரி | 01 |
| 10. ஆய்வு கூட உதவியாளர் | 01 |
| 11. மின்சாரதொழிநுட்பவியாலாளர்கள் | 01 |
| 12. சமையல்காரர்கள் | 02 |
| 13. பராமரிப்பு தொழிலாளிகள் | 01 |
| 14. சாரதிகள் | 03 |
| 15. சிற்றூழியர்கள் | 47 |
| 16. நாளந்த தொழிலாளிகள் | 15 |

## ❖ 2013ம் ஆண்டு உத்தியோகத்தர் ஆட்சேர்ப்புக்கள்

வைத்திய உத்தியோகத்தர் 02
கணக்காளர் 01
ஆய்வு கூட உதவியாளர் 01
உணவு பொறுப்பதிகாரி 01
தாதி உத்தியோகத்தர் 01
சிற்றூழியர்கள் 08

**புதிய உத்தியோகத்தர் நியமனம்**

கந்தானை தாதி பயிற்சி பாடசாலையில் இருந்த பயிற்ச்சியை நிறைவு செய்த முதல் குழுவினர் 2014 ஜனவரி 01ம் திகதி முதல் விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைகள் நிரந்தரமாக சேவையில் இணைக்கப்பட்டுள்ளார்.

**சேவையாளர்களுக்கு பயிற்சி அளித்தல்**

16 பேர் தாதிமார் பயிற்சிக்காக கந்தானை தாதியர் பயிற்சி பாடசாலைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு அந்த பயிற்சிகள் 2013 ம் ஆண்டு 2 குழுக்களாக ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**உள் வாரியான பதவியுயர்வு**

தேவையான தகுதிகள் உடைய சேவையாளர் ஒருவரை ஆய்வு கூட உதவியாளராக பதவியுயர்வு செய்தல்

**2013ம் ஆண்டின் போது பதவியிலிருந்து விலகுதல் மற்றும் சேவையை நிறைவு செய்தல்**

- கணக்காளர் 01 - வயது நிரம்பியதன் காரணத்தால் ஓய்வு பெறல்
- உணவு களஞ்சிய உத்தியோகத்தர் 01 - தனிப்பட்ட காரணங்களுக்காக விலகுதல்
- சிற்றூழியர் 01 – தனிப்பட்ட காரணங்களுக்காக விலகுதல்

## 2013 ம் ஆண்டில் போது இடமாற்றங்கள்

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு புதிய நியமனம் பெற்று வந்ததாதி உத்தியோகத்தர்களில் 03 வருடங்கள் சேவைகள் நிறைவு பெற்ற 03 பேர் சுகாதார அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டுள்ளார்.

## 2013ம் ஆண்டு பெறப்பட்ட முக்கியமான சாதனைகள்

**கீழுள்ள விடயங்கள் 2013ம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டவை**

- **2013ம் ஆண்டு வைத்திய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டவை - ரூ.14,505,000,00**

| | | |
|---|---|---|
| Fully Automated Bio Chemistry Analyzer | - | 8,736,000.00 |
| Fully Automated Hematology Analyzer | - | 2,500,000.00 |
| Cardiac Monitor | - | 750,000.00 |
| Defibrillator | - | 570,200.00 |
| Pulse Oxymeter | - | 135,500.00 |
| Major spare parts for Laser system | - | 1,098,600.00 |
| Vaporizer for Anesthetic Machine | - | 340,000.00 |
| Dental Items | - | 138,600.00 |
| Other medical items<br>( BP Apparatus, Forceps , etc. ) | - | 236,100.00 |

- **தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு – ரூ.363,800.00**
- **இயந்திர காரியாலய மின் உபகரணங்கள் கொள்வனவு – ரூ.571,200.00**

| | |
|---|---|
| **குளிரூட்டி** | **225,300.00** |
| **கணணி** | **104,300.00** |
| **வேறு உபகரணங்கள்** | **241,600.00** |

- **சுகாதார அமைச்சு மூல ரூ. 7,180,000.00பெறுமதியான புதிய வண்டி வைத்தியசாலைக்கு கிடைக்க பெற்றமை**
- **வாட்டு இலக்கம் 01 மற்றும்02 இல் சிகிச்சை பெரும் நீண்ட நாட்களாக காத்திருக்கும் நோயாளிகளோடு தொடர்புபடுவதை தடுப்பதற்கான வாட்டு இலக்கம் 05 என வேறான வாட்டு ஒன்று நிருவப்ப ட்டதோடு அதற்கான ரூ.225,000.00 செலவளிக்கப்பட்டுள்ளது.**
- **ஆய்வு கூட வசதிகளை மேம்படுத்துதல் நீண்ட நாட்கள் காலத்திலிருந்து நோயாளர்களுக்கான சிகிச்சை சிகிச்சைகள் மேம்படுத்தல் போன்றவிடயங்களுக்காகபுதிய3 மாடிகட்டிடமொன்றை நிறுவுதல்**
- **மதிப்பீட்டு செலவு ரூ.1,120,300.00**
- **வாகன தரிப்பிடம் ஒன்று நிறுவுதல் முதலில் 16 வாகனங்கள்நிற்பாட்டுவதற்காக தரிப்பிடம் ஒன்று அமைக்கப்படுவதோடு அதில் மேலும் ஒரு பகுதியாக மேலும் 08 வாகனங்கள் நிற்பாட்ட படுவதோடு இடம் ஒதுக்கி கட்டமாக தரிப்பிடம் அமைத்தல்**
- **வைத்தியசாலைக்கு பின்புறமுள்ள காணியில்6,275 அடி மண் நிரப்புதல் செலவு – ரூ 803,000.00**
- **வைத்தியசாலை சிற்றூழியர்களின் உதவியோடு கண் சிகிச்சை நிலையத்துக்கு நிற பூசிடுதல் இதற்காக வேறு செலவுகள் ஏற்படுவதில்லை.**

# வைத்தியசாலையினால் வழங்கப்பட்ட சேவைகள் பகுப்பாய்வு

## ❖ வழங்கப்பட்ட சேவைகள் பற்றிய சுருக்கம்

வைத்தியசாலையினால் வழங்கப்பட்ட முக்கியமான சேவைகள் அதாவது வெளி நோயாளர் பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, கிளினிக்குகள், உள்ளக சிகிச்சை வசதிகள், கண் சிகிச்சை பிரிவு மற்றும் பொது சத்திரசிகிச்சை வசதிகள் போன்றன சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டன.

மருத்துவ கிளினிக், சத்திரசிகிச்சை கிளினிக், சிறுவர் மருத்துவ சிகிச்சை கிளினிக், பல் சிகிச்சை கிளினிக், கண் சிகிச்சை கிளினிக், உளவியல் நோய் மருத்துவ கிளினிக், ஆரோக்கியமான பெண்கள் மற்றும் குடும்ப திட்டமிடல் கிளினிக் என்பவை இங்கே நடத்தப்படுகின்றன.

மருத்துவ கிளினிக், சத்திரசிகிச்சை கிளினிக், சிறுவர் மருத்துவ சிகிச்சை கிளினிக், கண் சிகிச்சை கிளினிக் என்பன விஷேட வைத்திய நிபுணர்களால் நடத்தப்படுகிறது. ஏனைய சகல கிளினிக்குகளும் அனுபவமிக்க மருத்துவ அலுவலர்களினால் நடத் தப்படுகின்றன.

வெளி நோயாளர் பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு அல்லது கிளினிக்குகளிலிருந்து நேரடியாக நோயாளர்கள் இங்கு அனுமதிக்கப்படுகிறார்கள். மருத்துவ பிரச்சனைகள், சத்திரசிகிச்சை பிரச்சனைகள், சிறுவர்களுக்கான மருத்துவ சிகிச்சை பிரச்சனைகள் மற்றும் விபத்து காயங்கள் தொடர்பான நோயாளர்கள் பொது வாட்டுகளுக்கு அனுமதிக்கப்பட்டு அங்கு அவர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. விஷேட வைத்திய நிபுணர்களின் பராமரிப்பு சேவை தேவைப்படும் நோயாளர்கள் தேவைப்படுமிடத்து மற்றைய வைத்தியசாலைகளில் உள்ள விஷேட வைத்திய நிபுணர்களிடம் அனுப்பப்படுகின்றனர் அல்லது தொடர்ந்து சிகிச்சை பெறு வதற்கு கிளினிக்குகளுக்கு மாற்றப்பப்படுகின்றனர். சிக்கலான நோய்களையுடைய நோயாளர்கள் விஷேட வைத்திய நிபுணர்களினால் சிகிச்சை அளிக்கப்படுவதற்காக அண்மையிலுள்ள வைத்தியசாலைகளுக்கு மாற்றப்படுகின்றனர். நோயாளர்கள் குணமடைந்து செல்லும்போது தேவைப்படுமிடத்து தொடர்ந்து சிகிச்சை பெறுவதற்கு அவர்கள் கிளினிக்குகளுக்கு மாற்றப்படுகின்றனர்.

❖ <u>பிரிவு ரீதியான பகுப்பாய்வு</u>

<u>வெளிநோயாளர் பிரிவு</u>

- நாளொன்றுக்கு சராசரியாக 475 நோயாளர்கள் சிகிச்சைக்காக பொது வெளி நோயாளர் பிரிவுக்கு சமூகமளிக்கின்றனர்.
- 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிநோயாளர் பிரிவுக்கு சமூகமளித்த நோயாளர்களின் எண்ணிக்கை 135,796 ஆகும்.




முக்கியமாக சீதுவை, ஜா-எல, கந்தான, கட்டுநாயக்கா, குறண, எக்கலப் பிரதேச நோயாளர்களும் கட்டுநாயக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு வலய ஊழியர்களும் விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையிலிருந்து சிகிச்சை பெறுகின்றனர்.

- போதியளவு மருத்துவ அலுவலர்கள் இல்லாதிருத்தல் மட்டுப்படுத்தப்பட்ட காரணி ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

## <u>அவசர சிகிச்சைப் பிரிவு</u>

- 24 மணி நேர சேவை இங்கு இடம்பெறுகிறது. வீதி விபத்துக்கள், தொழிலகம் சார்ந்த விபத்துக்கள். வீட்டில் இடம்பெறும் விபத்துக்கள் உள்ளடங்களாக சத்திரசிகிச்சை, மருத்துவ மற்றும் சிறுவர் மருத்துவ சிகிச்சை நோயாளர்களு க்கு இங்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆபத்தான அவசர நிலைமைகளுக் கும் சிகிச்சையளிக்கப்படுவதுடன் விஷேட வைத்திய நிபுணர்களின் பராமரிப்பு சேவை தேவைப்படும் நோயாளர்களை துறை நிபுணத்துவம் சார்ந்த மருத்துவ நிபுணர்களின் சிகிச்சைக்காக அண்மையில் உள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்படுகின்றனா் அல்லது மாற்றப்படுகின்றனர்.

- 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு சமூகமளித்த நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை 18,518 ஆகும்.




**<u>கிளினிக்குகள் (தனிவகை மருத்துவத்துக்கான மருத்துவ சிகிச்சை நிலையம்)</u>**

- **மருத்துவ கிளினிக்குகள், சத்திரசிகிச்சை கிளினிக், சிறுவர் மருத்துவ சிகிச்சை கிளினிக், நீரிழிவு நோய் கிளினிக், உயர் குருதி அமுக்க நோய் கிளினிக், கண் சிகிச்சை கிளினிக், உளவியல் நோய் மருத்துவ கிளினிக் ஆரோக்கியமான பெண்கள் மற்றும் குடும்ப திட்டமிடல் கிளினிக் ஆகியன இங்கு நடைபெறுகிறது.**
- **2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சகல கிளினிக்குகளுக்குமாக சமூகமளித்த நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை 112,028 ஆகும்.**



## பல் வைத்திய சிகிச்சை நிலையம்

- வார நாட்களில் தினந்தோறும் சாதரணமான பல் தொடர்பான பிரச்சனைகளுக் காக பல் சிகிச்சை நிலையம் நடத்தப்படுகிறது. பாடசாலை சிறார்களுக்கான பற்சிகிச்சை நிலையம் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் நடத்தப்படுகிறது.

  இந்த பற்சிகிச்சை நிலையத்தில் பல் பிடுங்குதல், பல் ஓட்டை அடைத்தல், காயங் கள், விபத்துகள் போன்ற அவசர நிலைமைகளின் போது ஏற்படுகின்ற பல் தொடர்பான பிரச்சனைகள், கால ஒழுங்கின்படி நடைபெறும் சிகிச்சைகள், சிறிய சத்திர சிகிச்சை நடைமுறைகள் மற்றும் பல் தொடர்பான பொதுவான வைத்திய ஆலோசனைகள் போன்றன இடம்பெறுகின்றன. பாதிக்கப்பட்ட மூன்றாவது பின் கடைவாய் பற்கள் மற்றும் பாதிக்கப்பட்ட கோரைப்பற்கள் போன்றவற்றை அகற்றல் போன்ற சிறியளவிலான வாய் சம்பந்த மான சத்திரசிகிச்சைகளும் இங்கு இடம்பெறுகின்றன.

- பல் பிடுங்கியவர்களின் எண்ணிக்கை - 3.445
- பல் ஓட்டை அடைத்தவர்களின் எண்ணிக்கை – நிரந்தர, தற்காலிக அடைப்புகள் - 2,048
- ஏனைய பிரச்சனைகள் - 2,818
- சிகிச்சை நிலையத்திற்கு பல் பிரச்சனைகளுடன்
- சமூகமளித்த நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை - 8,311




- முக அலங்காரத்திற்கான ஒப்பனை பல் வைத்திய சிகிச்சை நடவடிக்கைகளும் இச்சிகிச்சை நிலையத்தில் இடம்பெறுகின்றன.
- பற்களை வெண்மையாக்குதல் (பழைய நிலமைக்கு கொண்டு வருதல்), முன்பக்க பற்களுக்கு compasit கொண்டு அடைத்தல், பின்பக்க பற்களுக்கு GIC கொண்டு அடைத்தல், மற்றும் முன்பக்க பற்களுக்கு பொய்ப்பல் கட்டும் நடவடிக்கைகளும் இங்கு இடம்பெறுகின்றன.

## உள்ளக நோயாளர்கள்

- 164 படுக்கைகளுடன் 05 வாட்டுகள் உள்ளன. அதேவேளை 88 படுக்கைகள் கண் சிகிச்சை பிரிவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.
- 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொத்தமாக 15,963 நோயாளர்கள் வாட்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.




## மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சைகள்

- களனிப் பல்கலைக்கழக மருத்துவ பீட தொழில்சார் பிரிவிலுள்ள மருத்துவ ஆளணியினரின் உதவியுடன் பொதுவான சத்திரசிகிச்சைகள் (நடுத்தர மற்றும் சிறிய அளவிலான) மேற்கொள்ளப்பட்டன.

- 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சைகளின் மொத்த எண்ணிக்கை 12,879 ஆகும்.

- கட்டுப்பாட்டு வைத்தியசாலைக் கட்டண அறவீடு ஒன்று சகல வகை சத்திரசிகிச்சைகளுக்காகவும் அமுல்படுத்தப்படுகிறது. குறைந்த வருமானமுடைய நோயாளர்களுக்கு வைத்தியசாலைக் கட்டணத்தை அறவிடாதிருப்பதற்கான வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



## காயங்கள் சிகிச்சை பிரிவு

காயங்கள் சிகிச்சை பிரிவு நாள் தோறும் நடைபெறுகிறது. 22 கட்டில்களுடைய ஒரு வாட்டு தொகுதி இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

காயங்கள் சிகிச்சை பிரிவு சம்மந்தமான சேவைகள் இந்த வருடத்தினுள் மிக பாரிய வளர்ச்சியடைந்துள்ளது. வெளி மாகாணங்களின் நோயாளர் பாரிய அளவில் இந்த சிகிச்சை பிரிவு சமூகம் தருகின்றார்.

2013ம் ஆண்டிற்கான கணிப்பீடு கீழே தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிகிச்சைக்கு சமூகமளித்த புதிய நோயாளர் எண்ணிக்கை- | 376 | |
| 2. | சிகிச்சைக்கு சமூகமளித்த மொத்த நோயாளர் எண்ணிக்கை | - | 6,069 |
| 3. | வெளி சென்ற நோயாளர்களின் எண்ணிக்கை | - | 15 |
| 4. | நீரிழிவு காயங்கள் | - | 25% |
| 5. | No. of Arterial wounds treated | - | 5% |
| 6. | No. of venous wounds treated | - | 25% |
| 7. | No. of mix pathological wounds treated | - | 44% |
| 8. | No. of Surgical wounds treated | - | 1% |

பரிசீலித்து அறுவை சிகிச்சைகள் செய்ய வேண்டிய நோயாளர்கள் விசேட வைத்தியர்களின் கீழ் நிர்வகிக்கப்படும் அண்மையிலுள்ள கொழும்பு போதனா வைத்தியசாலை மற்றும் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்புவதோடுஅந்த சிகிச்சைகள் தாமதமின்றி மீண்டும் சிகிச்சைகள் தொடர்ந்து அளிப்பதற்கு விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு அனுப்பபடுகின்றார்.



## ஆய்வுகூட சோதனைகள்

அடிப்படையான ஆய்வுகூட சேவைகள் வழங்கப்படுகின்றன.

- மொத்தமாக 34,082 ஆய்வுகூட சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.




## ஈ.சி.ஜி (ECG)

- 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எடுக்கப்பட்ட ஈ.சி.ஜி (ECG) சோதனைகளின் மொத்த எண்ணிக்கை 3,005 ஆகும்.



## <u>ஊடுகதிர் சோதனை (X- rays)</u>

- 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எடுக்கப்பட்ட ஊடுகதிர் சோதனைகளின் (X- rays) மொத்த எண்ணிக்கை 3,424 ஆகும்.



# <u>கண் சிகிச்சை பிரிவு</u>

இப்பிரிவினால் வழங்கப்பட்ட சேவைகளாவன :-

நாளாந்த கிளினிக்குகள், 24 மணிநேர விபத்து அவசர சிகிச்சை முகாமைத்துவ சேவைகள், கண் தொடர்பான சோதனைகள். கண் சத்திர சிகிச்சைகள், லேசர் சிகிச்சைகள், உள்ளக நோயாளர் முகாமைத்துவம் மற்றும் கண் சிகிச்சை முகாம்கள்.

| சேவைகள் | 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற எண்ணிக்கை |
|---|---|
| நோயாளர்கள்உள் சேர்த்த எண்ணிக்கை | **12,830** |
| அறுவை சிகிச்சை எண்ணிக்கை | **10,247** |
| கிளினிக் சிகிச்சைக்கு வருகை தந்த நோயாளர்கள் எண்ணிக்கை | **65,642** |
| லேசர் சிகிச்சை பெற்ற எண்ணிக்கை | **2,228** |
| மூக்கு கண்ணாடி பெறுவதற்கு சிகிச்சை பெற்றவர்கள் எண்ணிக்கை | **22,104** |
| அவசர நோய்களுக்காக வருகை தந்த நோயாளர்கள் எண்ணிக்கை | **2,235** |
| கண் முகாம்களுக்கு வருகை தந்த நோயாளர்கள் எண்ணிக்கை | **3,000** |

## கிளினிக்குகள்

வாரத்தில் ஞாயிறு மற்றும் அரச பொது விடுமுறை நாட்கள் தவிர்ந்த வேறு அனைத்து நாட்களிலும் நடைபெறும்

- முன் கூட்டிய பதிவுகள் தேவைபடாததோடு நோயாளர்களுக்கு உடனடி சிகிச்சைகள் வழங்கப்படும்
- நோயாளர்களில் உட்சேர்க்கும் எல்லைகள் கிடையாது.
- கீழுள்ள கிளினிக் சேவைகள் நடைபெறும்

  - சாதாரண கண் சிகிச்சைகள்
  - நீரிழிவு சிகிச்சை கிளினிக்
  - குளுக்கோம நோய் கிளினிக் சிகிச்சை
  - சிறுவர் மருந்து கிளினிக் சிகிச்சை
  - தபால் மூல சிகிச்சைகள்

## 2. கண் சத்திர சிகிச்சைகள்

இந்தப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சைகளின் வகைகளும் புள்ளி விபரங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன.

I. முன்பக்க பிரிவு சத்திரசிகிச்சைகள்
II. பின்பக்க பிரிவு சத்திரசிகிச்சைககள் (Vitreo – retinal)
III. கண்குழி (Orbita) சம்பந்தமான சத்திரசிகிச்சைகள்
IV. குளுக்கோமா சம்பந்தமான சத்திரசிகிச்சைகள்
V. ஒப்பனை கண் சத்திர சிகிச்சைகள்

இப்பிரிவு காத்திருப்போர் பட்டியலை மிகவும் குறுகியகால அளவினுள் பேணுகின்றது. கட்ராக் சத்திர சிகிச்சை உள்ளடங்களாக அனேகமான சத்திர சிகிச்சைகள் ஒரே நாளில் நிறைவேற்றப்படுகிறது.

**2013 இல் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கை**

| சத்திர சிகிச்சை வகை | 2013ம் ஆண்டு சத்திர சிகிச்சைக்கு எடுத்து கொள்ளப்படவர் எண்ணிக்கை |
|---|---|
| முன் பகுதி அறுவை சிகிச்சை | 9108 |
| நீரிழிவு அறுவை சிகிச்சை | 113 |
| பின் பகுதி அறுவை சிகிச்சை | 297 |
| வேறு அறுவை சிகிச்சை | 729 |
| கிளினிக் மூலம் மேட்கொள்ளப்படும் அனைத்து அறுவை சிகிச்சை | 263 |
| **மொத்த எண்ணிக்கை** | **10,510** |

## ❖ <u>லேசர் சிகிச்சை</u>

பின்வரும் வகையான லேசர் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

i. YAG capsulomy
ii. YAG PI
iii. Pan Retinal Laser Photo coagulation(PRP)
iv. Focal Laser Treatment(FLT)

லேசர் சிககிச்சை பிரிவின் ஊடாக நீரிழிவு தொடர்பான விழிவெண்படலப் பாதிப்பு, குளுக்கோமா, மற்றும் ஏனைய நோய்களுக்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அனேக நோயாளர்களுக்கான லேசர் சிகிச்சைகள் சிகிச்சைக்கு வரும் தினமே மேற்கொள்ள வாய்ப்பளிக்கப்படுகிறது.

**2013 இல் மேற்கொள்ளப்பட்ட லேசர் சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கை**

| **லேசர் வகைகள்** | **எண்ணிக்கை** |
|---|---|
| PRP | 330 |
| FLT | 304 |
| YAG capsulomy | 1,099 |
| YAG PI | 130 |
| ஏனையவை | 365 |
| **மொத்தம்** | **2,228** |

## ❖ <u>உள்ளக நோயாளர் முகாமைத்துவம்</u>

கண் சிகிச்சை வாட்டு 88 படுக்கைகளைக் கொண்டுள்ள போதிலும். அனேகமான நோயாளர் கள் அனுமதிக்கப்படும் அன்றே சத்திர சிகிச்சையை பெற்றுக் கொண்டு அதே நாளிலேயே வீடு செல்கின்றனர். கீழே புள்ளிவிபரங்கள் காட்டப்பட்டுள்ளன.இந்த வசதிகள் காரணமாக இங்கு தரையில் படுக்க வைக்கும் நோயாளர்கள் காணப்படுவதில்லை.

அனுமதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 12,830

## 5. கண்பார்வை குறைவு சம்பந்தமான சேவைகள்

கண்பார்வை குறைவு சம்பந்தமாக சேவைகள் வழங்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| கண் கண்ணாடி சேவை | 22104 |
| H.V.F. Test Patients | 205 |
| P.M.T. Test Patients | 3,380 |
| சத்திர சிகிச்சைக்குப் பின்னரான நொயாளர்கள் | 1,397 |

❖ **<u>கண் சிகிச்சை முகாம்கள்</u>**

கண் சிகிச்சைப் பிரிவினூடாக துார இடங்களில் உள்ள குறைந்த வருமானம் உள்ள சலுகைகள் இல்லாத மக்கள் வசிக்கும் பிரதேசங்களில் உள்ள மக்களின் கண் பிரச்சனைகளுக்கு தீர்வு காணுமுகமாக கண் சோதனைகளை மேற்கொள்வதற்கு அப் பிரதேசங்களில் கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டன. கண்ணில் பிரச்சனைகள் காணப்பட்டவர்கள் சத்திரசிகிச்சைக்காக, லேசர் சிகிச்சைக்காக அல்லது தொடர்புடைய ஏனைய சிகிச்சைகளுக்காக அனுப்பப்பட்டனர். கண் சிகிச்சை பெற முடியாதவர்களுக்கு இலகுவாக சிகிச்சை பெற சுாதார அமைச்சின் Vision 2020 நிறுவனம் நடவடிக்கை மேற்கொணடுள்ளது.

**அட்டவணை 5 - 2013 இல் மேற்கொள்ளப்பட்ட சமூக கண்சிகிச்சை முகாம்கள்**

| திகதி | கண் சிகிச்சை முகாம் | பரிசோதிக்கப்பட் ட நோயாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 06/03/2013 | குளனி சு.வை.நி | 500 |
| 17/06/2013 | சூரியவெவ | 1000 |
| 10/09/2013 | சூரியவெவ | 1000 |
| 06/10/2013 | ஹனுப்பிடிய | 500 |

❖ **கண் சம்பந்தமான பரிசோதனைகள்**

கண் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு பின்வரும் வசதிகள் உள்ளன.

i. Fundus fluoresce in angiography
ii. Anterior segment photography
iii. HVF (Humphrey visual field)
iv. A scan / contact biometry
v. B scan
vi. OCT (Optical Coherance Tomography)

## ❖ <u>ஆய்வுகளும் வெளியீடுகளும்</u>

இந்தப் பிரிவு ஏராளமான ஆய்வு செயற்றிட்டங்களை மேற்கொள்கிறது. அவற்றில் சில சர்வதேச மட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

1.நீரிழிவு நோயிலிருந்து மீள எவ்வளவு காலம் எடுக்கும்
**2.**முதியோர்களுக்கிடையில் கண்ணில் கட்ராக் ஏற்படும் சதவீதம்.

- **படுக்கையில் தங்கியிருப்போ வீதம் - 72.44%**

- **2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணப்ட்ட நோய் நிலைமைகள்**

**உள்ளே அனுமதிக்கப்பட்ட நோயாளர்கள் அவர்களின் நோயின் அடிப்படையில் பின்வருமாறு,**

1. கண்ணில் கட்ராக் மற்றும் ஏனைய நோய்கள்.
2. சுவாசத் தொகுதி உறுப்புகளில் தொற்றுகள்
3. வைரஸ் காய்ச்சல உள்ளடங்களாக வைரஸ் நோய்கள்
4. உயர் குருதி அமுக்கம்
5. சிறுநீர் தொகுதி தொற்றுகள்
6. தீவிரமான இரைப்பை குடல் அழற்சி
7. இரைப்பை அழற்சி

- **விஷேட நிகழ்வுகள்**

  - வருடாந்த இரத்த தான முகாம் 2013 பெப்ரவரி 15 ஆம் திகதி நடத்தப் பட்டது.
  - பிரிவுத் தலைவர்கள் கூட்டம் அவ்வப்போது நடத்தப்பட்டதுடன், நாளாந்த விடயங்கள் கலந்தரையாடப்பட்டது.
  - தேவை என கருதும்போது அலுவலர்கள் கூட்டம் நடத்தப்பட்டது.

- **<u>கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஏனைய தொடர்புடைய விடயங்கள்</u>**
  - பெரியளவிலான மருந்துத் தட்டுப்பாடோ அல்லது நுகர்வோர் பொருட்கள் தட்டுப்பாடோ ஏற்படவில்லை.
  - ஏதேனும் தொழிற்சங்க நடவடிக்கைகளோ அல்லது ஏதாவது வகையான வேலை நிறுத்தங்களோ ஏற்படவில்லை
  - நோயாளர்கள் வைத்தியசாலை அல்லது அலுவலர்களுக்கு எதிராக எந்த வொரு வகையான பாரிய முறைப்பாடுகளை முன்வைக்கவில்லை.

## வழங்கப்பட்ட சேவைகள் - 2013 ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரை – விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை

**Services Rendered January to December 2013 Wijaya Kumaratunga Memorial Hospital**

| Service Rendered | | January | February | March | April | May | June | July | August | September | October | November | December | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| OPD | (No. of Patients) | 10,223 | 11,066 | 11,179 | 10,076 | 12,658 | 12,844 | 12,666 | 10,389 | 10,075 | 11,583 | 11,647 | 11,390 | **135,796** |
| ETU | (No. of Patients | 1,571 | 1,484 | 1,704 | 1,563 | 1,683 | 1,674 | 1,534 | 1,423 | 1,348 | 1,412 | 1,443 | 1,679 | **18,518** |
| CLINICS | | | | | | | | | | | | | | |
| Eye Clinics I | (No. of Patients) | 930 | 1,017 | 941 | 1,085 | 883 | 1,125 | 1,125 | 965 | 1,098 | 1,041 | 926 | 1,139 | **12,275** |
| Eye Clinics II | (No. of Patients) | 3,950 | 3,542 | 5,088 | 3,704 | 3,953 | 3,841 | 4,867 | 5,488 | 4,589 | 4,966 | 4,641 | 4,738 | **53,367** |
| Dental | (No. of Treatments) | 773 | 664 | 729 | 552 | 681 | 701 | 752 | 765 | 787 | 538 | 688 | 681 | **8,311** |
| Medical | (No. of Patients) | 1,741 | 1,685 | 2,143 | 1,690 | 1,978 | 1,947 | 1,805 | 1,996 | 1,949 | 1,803 | 2,288 | 1,751 | **22,776** |
| Diabetes/ | | | | | | | | | | | | | | |
| Hypertension | (No. of Patients) | 152 | 106 | 141 | 121 | 136 | 152 | 182 | 141 | 137 | 168 | 159 | 123 | **1,718** |
| Surgical | (No. of Patients) | 124 | 109 | 138 | 68 | 129 | 111 | 91 | 81 | 75 | 92 | 102 | 25 | **1,145** |
| Peadiatric | (No. of Patients) | 184 | 210 | 168 | 177 | 151 | 130 | 184 | 115 | 125 | 198 | 162 | 123 | **1,927** |
| Psychiatric | (No. of Patients | 184 | 112 | 149 | 165 | 133 | 152 | 197 | 150 | 200 | 166 | 202 | 204 | **2,014** |
| Family Planing | (No. of Patients) | 3 | 10 | 9 | 2 | 13 | 16 | 10 | 18 | 11 | 14 | 17 | 9 | **132** |
| Well Women Clinic | (No. of Patients) | 19 | 11 | 23 | 19 | 8 | 11 | 20 | 13 | 33 | 23 | 20 | 8 | **208** |
| Wound Care Unit | (No. of Patients) | 394 | 377 | 434 | 484 | 492 | 458 | 528 | 513 | 583 | 617 | 611 | 578 | **6,069** |
| In Patients | | | | | | | | | | | | | | - |
| Ward 01 | (No. of Admissions) | 107 | 94 | 99 | 114 | 129 | 135 | 114 | 88 | 90 | 104 | 122 | 124 | **1,320** |
| Ward 02 | (No. of Admissions) | 134 | 107 | 155 | 128 | 160 | 160 | 161 | 128 | 109 | 136 | 118 | 172 | **1,668** |
| Ward 03 | (No. of Admissions) | 367 | 424 | 449 | 307 | 499 | 398 | 560 | 431 | 499 | 429 | 408 | 372 | **5,143** |
| Ward 04 | (No. of Admissions) | 576 | 622 | 696 | 438 | 693 | 645 | 815 | 691 | 693 | 665 | 526 | 627 | **7,687** |
| Ward 05 | (No. of Admissions) | 17 | 10 | 15 | 13 | 18 | 11 | 10 | 11 | 15 | 10 | 9 | 6 | **145** |
| Operations | | | | | | | | | | | | | | |
| Eye Surgeory | (No. of Surgeories) | 658 | 739 | 918 | 562 | 923 | 865 | 1,131 | 895 | 966 | 988 | 787 | 815 | **10,247** |
| Minor eye surg (Done in Clinic) | (No. of Surgeories) | 5 | 22 | 24 | 14 | 11 | 26 | 23 | 30 | 26 | 18 | 46 | 18 | **263** |
| General Surgeory | (No. of Surgeories) | 11 | 9 | 15 | 13 | 17 | 11 | 10 | 11 | 15 | 10 | 10 | 9 | **141** |
| Laser Treatment | | 40 | 82 | 132 | 106 | 129 | 190 | 313 | 341 | 228 | 230 | 260 | 177 | **2,228** |
| Investigation :- Refraction | (No. of Tests) | 1,364 | 1,200 | 1,348 | 959 | 1,355 | 1,528 | 1,551 | 1,662 | 1,434 | 1,416 | 1,420 | 1,225 | **16,462** |
| Ophthelmic :- HVF | (No. of Tests) | 34 | 17 | 16 | 18 | 4 | 21 | 35 | 10 | 9 | 27 | 33 | 35 | **259** |
| LAB | (No. of Tests) | 2,861 | 2,603 | 2,519 | 2,424 | 2,446 | 2,280 | 2,287 | 2,890 | 3,300 | 4,043 | 3,472 | 2,957 | **34,082** |
| X-Ray | (No. of X-Rays) | 260 | 276 | 287 | 94 | 236 | 291 | 303 | 319 | 327 | 300 | 377 | 354 | **3,424** |
| E.C.G. | (No. of Patients) | 258 | 157 | 245 | 183 | 243 | 210 | 218 | 247 | 132 | 254 | 381 | 477 | **3,005** |

## விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை - சீதுவை
## 2013 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை

| சொத்துதுக்கள் | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| கையிருப்பகள் | 01 | 11,511,170.58 | 2,969,439.05 |
| வியாபாரமும் ஏனைய கிடைப்பனவுகளும் | 02 | 6,050,503.00 | 4,253,992.00 |
| காசும், காசு சாதனங்களும் | 03 | 8,820,904.50 | 9,753,250.06 |
| முற்கொடுப்பனவுகள் | 04 | 598,022.24 | 277,738.97 |
| **மொத்த சொத்துகள்** | | 26,980,600.32 | 17,254,420.08 |
| நடைமுறை மூலதன செலவினம் | 05 | 2,241,934.00 | |
| **உரியாண்மையும் பொறுப்புகளும்** | | | |
| மூலதனமும் ஒதுக்கங்களும் | 06 | 48,191,394.25 | 40,407,506.74 |
| திரண்ட நிதி/நட்டம் | 07 | 153,579,584.79 | 155,296,482.60 |
| | | 201,770,979.04 | 195,703,989.34 |
| **மொத்த சொத்துக்கள்** | | 230,993,513.36 | 212,958,409.42 |
| **நடைமுறை பொறுப்பகள்** | | | |
| கொடுபட வேண்டியவை | 08 | 16,034,021.44 | 12,000,078.98 |
| கடன்கள் | 09 | 20,724,091.46 | 7,302,547.44 |
| கொடுபட வேண்டிய சம்பளம் | 10 | 17,616,699.70 | 13,109,865.91 |
| **மொத்த பொறுப்பகள்** | | 54,374,812.60 | 32,412,492.33 |
| Net Assets | | **176,618,700.76** | **180,545,917.09** |

## தேறிய சொத்துக்கள்

| | | | |
|---|---|---|---|
| மூலதனம் | 11 | 75,787,890.44 | 75,787,890.44 |
| அரச மூலதனம் | 12 | 131,531,083.25 | 114,826,665.05 |
| நன்கொடை | | 461,894.60 | 218,844.60 |
| வருமானம் | | 2,131,366.30 | 2,131,366.60 |
| மிகை / குறைவு | 13 | (33,293,533.83) | (12,418,849.30) |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | | **176,618,700.76** | **180,545,917.09** |

……………………………………… ………………………………………

**தலைவர்** **தலைவர்**

……………………………………… ………………………………………

**பணிப்பாளர்** **கணக்காளர்**

# விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை - சீதுவை
# 2013.01.01 – 2013.12.31 வரையான காலப்பகுதிக்கான
# வருமான செலவு கூற்று

| **வருமானம்** | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| அரசாங்க மானியம் (மீள் எழும்) | | 120,250,000.00 | 128,070,000.00 |
| மூலதன | | 17,525,581.80 | 15,817,907.36 |
| ஏனைய வருமானம் | 14 | 16,534,203.60 | 10,545,200.80 |
| **மொத்த வருமானம்** | | 154,309,785.40 | 154,433,108.16 |

## செலவு

| | | | |
|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள | 15 | 90,863,190.23 | 80,659,607.32 |
| விநியோகம் | 16 | 37,361,818.72 | 29,115,286.41 |
| பராமரிப்பு செலவு | 17 | 17,546,479.30 | 16,944,082.36 |
| ஏனைய செலவு | 18 | 27,481,236.35 | 24,067,261.61 |
| **மொத்த செலவு** | | **173,252,724.60** | **150,786,237.70** |
| **காலப்பகுதிக்கான மிகை** | | **(18,942,939.20)** | **3,646,870.46** |

# விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை - சீதுவை
# காசுப் பாய்ச்சல் கூற்று - 2013

| | 2013 ரூபா |
|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் காசுப் பாய்ச்சல்கள்** | |
| கணக்குகளின்படி வருடத்திற்கான மிகை | (18,942,939.20) |
| **செம்மையாக்கல்கள்** | |
| தேய்மானம் | 17,546,479.30 |
| பணிக்கொடை ஏற்பாடு | (17,525,581.80) |
| மிகை செலவு | 17,455,486.48 |
| காலாவதியான பொருட்களுக்கான ஏற்பாடு | 932,345.56 |
| பணிக்கொடை ஏற்பாடு செலவு | 4,906,904.56 |
| மிகை முன்செலவு | (320,283.27) |
| மிகை வருமானம் | (1,796,511.00) |
| கடந்த வருட செம்மையாக்கல்கள் | (799,980.33) |
| ஓய்வுதிய செலவுகள் | (400,070.77) |
| **தொழிற்படு செயற்பாடுகளில் காசுப் பாய்ச்சல்** | **1,055,849.53** |
| **முதலீட்டு செயற்பாடுகளில் காசுப் பாய்ச்சல்** | |
| பொறி, உபகரணம் | (17,422,184.00) |
| செயற்பாட்டு நடவடிக்கைகள் | (2,241,934.00) |
| **முதலீட்டு செயற்பாடுகளில் தேறிய காசுப் பாய்ச்சல்** | **(19,664,118.00)** |
| **முதலீட்டு செயற்பாடுகளில் காசுப் பாய்ச்சல்** | |
| அரச பிரதான மூலதனம் | 27,050,000.00 |
| நன்கொடை | 100,000.00 |
| **முதலீட்டு செயற்பாடுகளில் தேறிய காசுப் பாய்ச்சல்** | **27,150,000.00** |
| **காசும் காசுக்கு சமமானவையும் - தேறிய அதிகரிப்பு / குறைவு** | **8,541,731.53** |
| **2013.01.01 இல் காசும் காசுக்கு சமமானவையும்** | **2,969,439.05** |
| **2013.12.31 இல் காசும் காசுக்கு சமமானவையும** | **11,511,170.58** |

| காசுப் பாய்ச்சல் கூற்று குறிப்பு | 2013 |
| --- | --- |
| வங்கியிலுள்ள காசு | 11,485,620.58 |
| சில்லறைக் காசு | 25,000.00 |
| கையிலுள்ள காசு | 550.00 |
| | 11,511,170.58 |

## விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை - சீதுவை
## 2013 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான உண்மை சொத்துக்கள்/மாற்றங்கள் அட்டவணை

| | நன்கொடை திறைசேறி | ஆரச மூலதன பெறுவனவு | வேறு நன்கொடை | விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை நிதியம் | முதலீட்டு சபை | UDA | மூலதன ஒதுக்கம் | தேறிய இலாபம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
